# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | MC.04/2022 | Date:02.06.2023 |
| Deposition of Witness for | : | ம.சா.1 | |
| Name | : | **ஜெயப்பிரியா** | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பிரமாணபத்திரத்தில் நான் யாருக்கு சொந்தமான வீட்டில் வசிக்கிறேன் என்று கூறவில்லை என்றால் ஞாபகமில்லை. அதேபோன்று எனக்கோ, என்னை சார்ந்தவர்களுக்கோ மருத்துவசெலவுகள் இருப்பதாக நான் தெரிவிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதித்தபோது எனது கணவர் வந்து கையொப்பம் செய்தார் என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு சொந்தமான சொத்துக்கள் என நான் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் எதிர்மனுதாரரின் தகப்பனாரின் தகப்பனார் அவர்கள் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு எழுதிகொடுத்த சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கு அந்த சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்ட நகைகள் நாங்கள் கொடுத்ததாக முதல்விசாரணையில் தெரிவித்துள்ள நிலையில் மீண்டும் எதிர்மனுதாரர்கள் நகைகள் கேட்க வாய்ப்பில்லை என்றால் இல்லை மறுபடியும் கேட்டார்கள்.

2. எதிர்மனுதாரர் திருமணத்தின்போது கேட்ட நகைகளில் பாதி கொடுக்கப்பட்டதால் மீதி நகைகளை கேட்டு என்னை கொடுமைபடுத்தியதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மருத்துவ செலவுகள் அனைத்தும் எதிர்மனுதாரர்தான் கவனித்துகொண்டார் என்றால் இல்லை. பிரசவத்திற்கு பின்பு எனக்கு மார்பில், காலிலும் கட்டி வந்ததால் அதற்கான மருத்துவ செலவுகளை எதிர்மனுதாரர் கவனித்தார் என்றால் காலில் கட்டி இருந்தது அந்த மருத்துவ செலவை என் அம்மாதான் பார்த்துகொண்டார். மேற்படி கட்டிக்காக எங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சுசிலா மருத்துவமனை மற்றும் சர்மிளா மருத்துவமனை. எதிர்மனுதாரருக்கு எந்ததெந்த பெண்களுடன் தகாத தொடர்பு

இருந்தது என்றால் தொடர்ந்து இருந்தது ஆனால் யார் யார் என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரை கண்டித்தார்களா என்றால் இல்லை.

3. எதிர்மனுதாரர் தாக்கல்செய்துள்ள விவாகரத்து சம்மந்தமான அறிவிப்பு எனக்கு எப்போது கிடைத்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை, 2020 ம் ஆண்டு அக்டோபர் மாதம். மேற்படி விவாகரத்து மனு ம.சா.ஆ.7 ஆனது சேலம், குடும்பநல நீதிமன்றத்தில் கடந்த 01.10.2020 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 புகாரில் கடந்த எட்டு மாதமாக எனது தாயார் வீட்டில் வசித்துவருகிறேன் என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரிவித்துள்ளேன். 22.09.2020 ம் தேதி எனது குழந்தை என்னுடன்தான் இருந்தது என்றால் சரிதான். ஆனால் ம.சா.ஆ.4 புகாரில் எதிர்மனுதாரர் எனது குழந்தையை 10 நாட்களுக்கு முன்பு தூக்கிகொண்டு சென்றுவிட்டார் என தெரிவித்தள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி புகாரிலும், முதல் விசாரணையிலும் மாறுபட்டு சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு எனது கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளதை கருத்தில்கொண்டு மாறுபட்டு சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 புகாரில் எதிர்மனுதாரர் பெற்றோர் மற்றும் அக்காவின் பேச்சைகேட்டு என்னை அடித்து துரத்திவிட்டதாகவும், எதிர்மனுதாரருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்க எதிர்மனுதாரரின் பெற்றோர் முயற்சி செய்வதாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது திருமணம் செய்துவைக்க முயற்சிசெய்வதாக எனக்கு எப்படி தெரிந்தது என்றால் எதிர்மனுதாரரின் அக்கா என்னிடம் சொன்னார்.

5. எப்போதும் எதிர்மனுதாரர் மதுபோதையில் இருப்பாரா என்றால் அடிக்கடி மது அருந்துவார். நான் சொல்வதுபோல் எப்போதும் எதிர்மனுதாரர் மதுபோதையில் இருந்தால் அவரால் மாதம் ரூபாய் ஐந்து லட்சம் சம்பாதிக்கமுடியாது என்றால் சரியல்ல அவருடைய அப்பா, அம்மா சம்பாதித்து கொடுப்பார்கள். அவரும் சம்பாதிப்பார். விவாகரத்து அறிவிப்பு கிடைத்த பிறகுதான் எதிர்மனுதாரர் மீது வேண்டுமென்றே காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 21.01.2020 ம் தேதி எதிர்மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் 20 நாட்கள். எவ்வளவு நாட்கள் வீட்டில் ஓய்வு எடுத்துவந்தார் என்றால் சுமார் ஒரு

மாதம் ஓய்வு எடுத்துவந்தார். நான் எட்டு மாதத்திற்கு முன்பே பெற்றோர் வீட்டிற்கு சென்றதா ம..சா.ஆ.2 புகாரில் கூறியுள்ள நிலையில் விபத்தில் அடிப்பட்டு வீட்டிலிருந்த எதிர்மனுதாரருக்கு நான் பணிவிடை செய்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

6. நான் எதிர்மனுதாரை வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டு அவரிடமிருந்து பணம் பெற்று எனது பெற்றோருக்கு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்கொலை செய்துகொள்வதாக எதிர்மனுதாரரை மிரட்டி அவர் மீது காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்து அவருக்கு கொடுமைகள் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எங்களிடம் எந்த வரதசட்னையும் கேட்கவில்லை என்றும், எங்கள் வீட்டிலிருந்து எதிர்மனுதாரருக்கு எந்த வரதசட்சனையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரின் குடும்பம் வசதியான குடும்பம் என எண்ணி எதிர்மனுதாரரின் அக்கா மூலம் திருமணம்பேசி முடித்தபிறகு எதிர்மனுதாரரின் குடும்பம் வசதியில்லை என்று தெரிந்தபிறகு நான் எதிர்மனுதாரரை புறக்கணித்தேன் என்றால் சரியல்ல. நான் பணம் பறிக்க வேண்டி ஒவ்வொரு முயற்சியாக செய்துபார்த்து தற்போது இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க மூடிய நீதிமன்றத்தில் சாட்சியம் பதிவுசெய்யப்படுகிறது.)**

1. குழந்தை பிறந்த பிறகு மீண்டும் உடனடினயாக குழந்தை வேண்டாம் என்று எதிர்மனுதாரரின் குடும்பத்தார் என்னை மருத்துவமனைக்கு அழைத்துசென்று எனக்கு கருத்தடை சாதனம் பொறுத்தப்பட்டது என்றால் சரிதான். ஆறுமாதம் கழித்து பொறுத்தப்பட்டது. உடனடியாக குழந்தை வேண்டாம் என்று முடிவு எடுத்தபிறகு மீண்டு குழந்தை வேண்டும்என்று என்னை எதிர்மனுதாரர் பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

2. மேற்படி குற்றச்சாட்டை எனது மனுவில் தெரிவிக்கவில்லை என்றும், தற்போது கற்பனையாக வழக்கிற்காக முதல் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2023.06.02 16:59:14 +0530

Sd /- Jayapriya

Judicial Magistrate No.1,
Sankari.